குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 77–2014

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ஆஞ்சி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.திம்மராயப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| வயது | : | 36 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 24.02.2026**

**(எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் அத்திமுகம் கிராமத்தில் குடியிருந்து Real Estate தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு அனந்தகுமார் என்பவருக்கும் உத்தனப்பள்ளி கிராமத்தை சேர்ந்த ஒரு நபருக்குமிடைய அத்திமுகம் – சூளகிரி செல்லும் சாலையில் ஆஞ்சிநேயர் கோயில் அருகே அடிதடி தகராறு நடந்த வழக்கில் தகராறு நடந்த அதே நாள் இரவு போலிசார் வந்து அனந்தகுமாரை விசாரித்தார்கள் மறுநாள் போலிசார் கேட்டுக்கொண்டதால் காவல்

நிலையத்தில் வைத்து கையெப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தான் நான் காவல் நிலையத்தில் செய்ய கையொப்பம் ஆகும். பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பார்வை மகஜர் குறித்து வேறு எதுவும் தெரியாது.

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

கடந்த 30.03.2010ம் தேதி எனக்கு தெரிந்த அனந்தகுமார் என்பவரிடம் இருந்து இவ்வழக்கின் எதிரிகள் அத்திமுகத்தில் இருந்து செட்டிப்பள்ளிக்கு செல்லும் சாலையில் உள்ள ஆஞ்சிநேயர் கோயில் அருகே இருச்சக்கர வாகனத்தில் வந்து அனந்தகுமார் அணிந்திருந்த தங்க செயினை பறிக்க முயன்றதாக கேள்வி பட்டதாகவும், தொடர்ந்த அதே நாள் காலை 10.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து தயாரித்த பார்வை மகஜருக்கு சாட்சியாக இருந்து கையொப்பம் போட்டு கொடுத்து தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**